# நமது தின கனி
காலை நாளிதழ்

# NAMADHU DHINA KANI
Daily Morning

| Vol: 01 | Issue: 256 | 4 Pages | 19.4.2024 | Friday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 | Tiruppur |
|---|---|---|---|---|---|---|---|
| மலர்: 01 | இதழ்: 256 | 4 பக்கங்கள் | 19.4.2024 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 | திருப்பூர் |


## மக்களவை தேர்தல் தமிழ்நாட்டில் இன்று வாக்குப்பதிவு: 6 மணி வரை வரிசையில் நிற்கும் அனைவரும் வாக்களிக்க தேர்தல் ஆணையம் ஏற்பாடு

சென்னை, ஏப். 19

தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் உள்ள 40 மக்களவைத் தொகுதிகளிலும் நாளை ஒரே கட்டமாக வாக்குப்பதிவு நடைபெறுகிறது. நாட்டின் 18வது மக்களவை தேர்தல் 7 கட்டங்களாக நடத்தப்படுகிறது.

முதல்கட்ட வாக்குப்பதிவு இன்று நடைபெறுகிறது. தமிழ்நாட் டில் உள்ள 39 தொகுதி களில் மொத்தம் 950 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

விளவங்கோடு மற்றும் திரிபுரா மாநிலம் ராம்நகர் ஆகிய 2 சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலும் நாளை நடக்க உள்ளது.காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிக்கு நிறைவு பெறுகிறது.

வாக்காளர் அடையாள அட்டை இல்லாதவர்கள் ஆதார், பான் கார்டு, பாஸ்போர்ட், ஓட்டுநர் உரிமம் உள்ளிட்டவற்றை பயன்படுத்தி வாக்களிக்கலாம்.தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் உள்ள 68,320 வாக்குச்சாவடி களும் தயார் நிலையில் உள்ள நிலையில் தமிழகத்தில் 6.23 கோடி பேர் வாக்களிக்க தகுதி யானவர்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தமிழக தலைமைச் செயலகத்தில் சத்யபிரத சாகு செய்தி யாளர்கள் சந்திப்பில் கூறியிருப்ப தாவது:

தமிழகத்தில் இன்று காலை 7 மணிக்கு வாக்குப் பதிவு தொடங்குகி றது. இன்று மாலை 6 மணிக்கு வரிசையில் நிற்கும் அனைவரும் வாக்களிக்கலாம்.வரிசையில் நிற்போருக்கு டோக்கன் வழங்கப்படும். அவர்கள் அனைவருமே வாக்களிக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. தமிழகத்தில் 68,321 வாக்குச் சாவடிகள் உள்ளன.

இவற்றில் பதற்றமான வாக்குச் சாவடிகளாக 8050, மிகவும் பதற்றமான வாக்குச் சாவடிகளாக 183 கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் 39 தொகுதிகளில் 950 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள். அவர்களில் 874 பேர் ஆண்கள், 76 பெண்கள் உள்ளனர். வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்து வாக்காளர் அடையாள அட்டை இல்லாவிட்டாலும் டிரைவிங் லைசன்ஸ், ஆதார் கார்டு உள்ளிட்ட 13 ஆவணங்களை கொண்டு வாக்களிக்கலாம்.தமிழகத்தில் மொத்தம் வாக்காளர்கள் 6.23 கோடி பேர் உள்ளனர். முதல் முறை வாக்காளர்கள் 10.92 லட்சம் பேர் உள்ளனர். அது போல் சிவிஜில் செயல் மூலம் 4,861 புகார்கள் வந்தன. அவற்றில் 22 புகார்கள் மட்டுமே நிலுவையில் உள்ளன.

மற்றவை தீர்வு காணப் பட்டன. தமிழகத்தில் இன்று நடைபெறும் மக்களவை தேர்தல் வாக்குப் பதிவு பாதுகாப்பு பணியில் 1.3 லட்சம் காவலர்கள் ஈடுபடுத்தப்படுவர்.1,58,568 வாக்கு பதிவு இயந்திரங்களும் 81,157 கன்ட்ரோல் யூனிட்களும், 86,858 விவிபேட்டும் பயன்படுத்தப்படவுள்ளன. 44,800 வாக்குச் சாவடிகள் வெப் கேஸ்டிங் நுட்ப முறையில் வாக்குப் பதிவு நேரடியாக கண்காணிக்கப்படும். 65 சதவீத வாக்குச் சாவடி கள் ஆன்லைன் மூலம் கண்காணிக்கப்படும். வாகன தணிக்கை, ரெய்டு மூலம் 173.8 கோடி பறிமுதல் செய்யப் பட்டன.85 வயதுக்கு மேற்பட்டோரின் வீடுகளுக்கே சென்று 67,175 வாக்குகள் பெறப் பட்டன. அது போல் 41,628 மாற்றுத்திறனாளிகளிடம் வாக்குகள் பெறப் பட்டன. ஆக மொத்தம் வீடுக ளுக்கே சென்று 1,08,803 பேரிடம் வாக்குகள் பெறப்பட்டன.

எனினும் மாற்றுத் திறனாளிகள், 85 வயதுக்கு மேற்பட்ட முதியவர்களை வாக்குச் சாவடிக்கு அழைத்து வர இலவச வாகனங்கள் இயக்கப்படும். இதற்கு 1950 என்ற எண்ணில் பதிவு செய்ய வேண்டும். இவ்வாறு சத்யபிரத சாகு தெரிவித்தார்.மேலும் அவர் கூறுகையில் பூத் ஸ்லிப் இல்லாவிட்டாலும் வாக்குப் பதிவு மையத்திற்கு சென்றால் எந்த வாக்குச் சாவடி என அடையாளம் காட்ட அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர் என்றார்.

வாக்காளர் பட்டியலில் பெயர் இருந்து வாக்காளர் அடையாள அட்டை இல்லாமல் இருப்பவர்கள் 12 ஆவணங்களை கொண்டு வாக்களிக்கலாம்.

அவை1. ஆதார் கார்டு2. 100 நாள் வேலை திட்டத்தின் அடையாள அட்டை3. வங்கி அல்லது தபால் நிலையங்களில் புகைப்படத்துடன் கூடிய பாஸ்புக்4. தொழிலாளர் நலத் துறை அமைச்சகத்தின் காப்பீடு அட்டை 5. டிரைவிங் லைசன்ஸ் 6. பான் கார்டு7. பாஸ்போர்ட் 8. புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணங்கள்

9. மத்திய மாநில அரசுகள், பொதுத் துறை நிறுவனங்களின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை10. எம்பிக்கள், எம்எல்ஏக்கள், எம்எல்சிகளுக்கு கொடுக்கப்பட்ட அடையாள அட்டை11. மாற்றுத்திறனாளிகளுக்கான அடையாள அட்டை 12. தேசிய மக்கள்தொகை பதிவின் கீழ் கொடுக்கப்பட்ட ஸ்மார்ட் கார்டுஆகிய 12 ஆவணங்களை கொண்டு வாக்களிக்கலாம் என சத்யபிரதா சாகு தெரிவித்தார்.

## வியர்வை சிந்தி விதைத்தவை அனைத்தும் அறுவடை செய்யும் நாள் வாக்குப்பதிவு நாள் பூத் ஏஜெண்டுகள் விழிப்புடன் பணியாற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் மடல்

சென்னை, ஏப். 19

திமுக வாக்குச்சாவடி முகவர்கள் விழிப்போடு செயல்பட வேண்டும் என்று தொண்டர்களுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். இதுதொடர்பாக திமுக தலைவரும் முதலமைச் சருமான மு.க.ஸ்டாலின் கழக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில், நம் உயிருடன் கலந்திருக்கும் தலைவர் கலைஞரின் அன்பு உடன்பிறப்புகளுக்கு, உங்களில் ஒருவன் எழுதும் மடல்.மொத்தம் 7 கட்டங்களாக நடைபெறவிருக்கும் இந்தியாவின் 18ஆவது பாராளுமன்ற பொதுத்தேர்தலின் முதல் கட்ட வாக்குப்பதிவு நடைபெறும் தமிழ்நாட்டின் 39 மக்களவைத் தொகுதிகளும் புதுச்சேரியின் ஒரு மக்களவைத் தொகுதியும் உள்ளடங்கிய 102 தொகுதிகளிலும் நடைபெறுகிறது. இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் பாராளுமன்ற மக்களவைத் தேர்தலை அறிவித்த நாளிலிருந்து உடன்பிறப்புகளாம் நீங்கள் அனைவரும் களத்தில் இறங்கிப் பணியை மேற்கொண்டு, தோழமைக் கட்சியினருடன் ஒருங்கிணைந்து, மிகக் குறைந்த கால அவகாசத்திற்குள் வாக்காளர்களைச் சந்தித்து ஆதரவைப் பெற்று, வெற்றியை உறுதி செய்து, தேர்தல் பணியில் தி.மு.க.வினரை மிஞ்ச எவரும் கிடையாது என்பதை மீண்டும் ஒரு முறை நிரூபித்திருக்கிறீர்கள்.மார்ச் 22 ஆம் தேதி தீரர் கோட்டமாம் திருச்சியில் எழுச்சிகரமாகத் தொடங்கிய உங்களில் ஒருவனான என்னுடைய பரப்புரைப் பயணம், ஏப்ரல் 17 அன்று தமிழ்நாட்டின் தலைநகருக்குள் அடங்கிய தென்சென்னை மத்திய சென்னை தொகுதிகளில் மக்களின் உணர்ச்சிகரமான முழக்கங்களுடன் நிறைவடைந்திருக்கிறது. நான் மிகுந்த நம்பிக்கையுடன் இருக்கிறேன். களத்தில் நமக்குக் கிடைத்துள்ள ஆதரவு, வாக்குகளாகப் பதிவாகி, வெற்றியாக வெளிப்படும் என்பதில் உறுதியுடன் இருக்கிறேன். அந்த நம்பிக்கையும் உறுதியும் நிறைவேற, வாக்குப்பதிவு நாளான ஏப்ரல் 19 அன்று கழகத்தினர் மிகுந்த கவனத்துடன் செயலாற்ற வேண்டும்.

அப்போதுதான், இத்தனை நாள் பாடுபட்டது பயன் தரும். தமிழ்நாட்டில் இந்தியா கூட்டணி வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்ய வேண்டிய கடமைக் கழகத் தொண்டர் ஒவ்வொருவருக்கும் இருக்கிறது.

மாவட்டக் கழகச் செயலாளர்கள் தொடங்கி கிளைக் கழக நிர்வாகிகள் வரை தங்களுக்கான பணிகளைத் திட்டமிட்டுக்கொண்டு செயலாற்றுவதுடன், வாக்குச்சாவடிப் பணிகளில் ஈடுபடக்கூடிய பாக முகவர்கள், வாக்குச்சாவடி முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள் உள்ளிட்டவர்கள்தான் வாக்குப்பதிவு நாளின் முன்களப் பணியாளர்கள், முழுமையான போர் வீரர்கள்.இதில் வாக்குச்சாவடி முகவர்கள், மாற்று முகவர்கள் ஆகியோர் வாக்குப்பதிவு தொடங்கி நிறைவடையும் வரை விழிப்புடன் செயலாற்ற வேண்டிய பணியில் இருப்பதால், அவர்கள் கடைப்பிடிக்க வேண்டிய விதிமுறைகளை முழுமையாக அறிந்திருக்க வேண்டியது அவசியமாகும்.அதற்கான பயிற்சியினை நமது கழகச் சட்டத்துறையின் உதவியுடன் ஏற்கனவே வழங்கியுள்ள நிலையில், வாக்குப்பதிவு நாளன்று மறக்காமல் மேற்கொள்ள வேண்டிய கடமைகளை நினைவூட்ட விரும்புகிறேன்.காகித வாக்குச் சீட்டுக்குப் பதில், மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களில் பொதுமக்கள் வாக்களிப்பதால், நாம் பின்பற்ற வேண்டிய விதிமுறைகளும், கவனிக்க வேண்டிய நடைமுறைகளும் நிறைய உள்ளன. அவை நம் தி.மு.கழகத்தின் சட்டத்துறை சார்பில் மாவட்டக்கழகச் செயலாளர்கள் மூலமாக உங்களிடம் கையேடாக வழங்கப் பட்டிருக்கும்.அவற்றைக் கவனத்தில் கொண்டு வாக்குச்சாவடி முகவர்கள் விழிப்போடு செயல்பட வேண்டும். பாக முகவர்கள் உள்ளிட்ட கழகத்தின் தேர்தல் பணிகளை மேற்கொள்வோர் இவை ஒவ்வொன்றையும் உறுதி செய்யவேண்டும். வாக்குப்பதிவில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிமுறைகள் சரியாக அமைந்தால்தான் வாக்கு எண்ணிக்கையின்போது கழகக் கூட்டணியின் முழுமையான வெற்றி உறுதியாகும். விரைந்து களப்பணியாற்றி, வியர்வை சிந்தி விதைத்தவை அனைத்தும் அறுவடையாகும் நாள்தான் வாக்குப்பதிவு நாள். அதனால் மிகுந்த விழிப்புடன் பணியாற்றுங்கள். வாக்குரிமையை நிலைநாட்டுவோம். மகத்தான வெற்றியை ஈட்டுவோம் என்று குறிப்பிட்டுள்ளார்.



மக்களவைத் தேர்தலுக்காக தமிழகம் முழுவதும் சூறாவளி சுற்றுப்பயணத்தில் ஈடுபட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரச்சாரத்தை முடித்த கையோடு நேற்று முன் தினம் இரவு சென்னை மெரினாவில் உள்ள கலைஞர் கருணாநிதி நினைவிடத்தில் மரியாதை செலுத்தினார். அருகில் அமைச்சர் உதயநிதி உள்ளார்

## 'அக்பர் சீதா' சிங்கங்களுக்கு 'சூரஜ் தனயா' என்ற புதிய பெயர்கள் வைக்க முடிவு



திரிபுரா, ஏப். 19

திரிபுரா மாநிலத்தில் உள்ள செபாஜிலா உயிரியல் பூங்காவிலிருந்து மேற்குவங்கத்தில் உள்ள சிலிகுரி உயிரியல் பூங்காவிற்கு பிப்ரவரி 12ம் தேதி சீதா, அக்பர் சிங்கங்கள் கொண்டு வரப்பட்டன.

இதனையடுத்து, 'சீதா' சிங்கம் மற்றும் 'அக்பர்' சிங்கத்தை ஒரே இடத்தில் அடைப்பது இந்து மதத்தை அவமதிக்கும் விஷயம் என விஷ்வ இந்து பரிஷத் மேற்குவங்க உயர்நீதிமன்றத்தில் மனுத்தாக்கல் செய்தது.

அவ்வழக்கின் விசாரணையில், "சீதாவை நாங்கள் கடவுளாக வணங்குகிறோம். அவர் கோயிலில் இருக்க வேண்டும். காட்டுக்குள் அல்ல" எனவிஷ்வ ஹிந்து பரிஷித்தரப்பில் கொல்கத்தா உயர்நீதிமன்றத்தில் வாதம் முன்வைக்கப்பட்டது.

மேலும், உலகம் முழுவதும் உள்ள அனைத்து இந்துக்களுக்கும் ராமரின் மனைவியான "சீதா" புனித தெய்வமாக கருதுவதால், சீதா என்கிற பெயரை ஒரு பெண் சிங்கத்திற்கு சூட்டுவது, எங்களுக்கு வேதனையை தருகிறது. இது கடவுளை அவமதிப்பது மற்றும் அனைத்து இந்துக்களின் மத நம்பிக்கையின் மீதான நேரடித் தாக்குதல் என விஷ்வ ஹிந்து பரிஷத் தனது மனுவில் தெரிவித்துள்ளது.

அன்பினால் பெண் சிங்கத்திற்கு சீதா என பெயரிட்டிருப்பார்கள். துர்கை பூஜையின் போது நாம் சிங்கத்தை வழிபடுகிறோம். இது ஒவ்வொருவரின் மனநிலையைப் பொறுத்தது" என நீதிபதி இதற்கு பதில் அளித்தார்.

இப்போது "சிங்கத்திற்கு பெயரை வைப்பார்கள், நாளை ஒரு கழுதைக்கு தெய்வத்தின்பெயர்வைப்பார்கள்.எங்களின்மனதைஇதுபுண்படுத்துகிறது" என விஷ்வ ஹிந்து பரிஷத் தரப்பில் வாதம் முன்வைக்கப்பட்டது.

திரிபுரா உயிரியல் பூங்கா அதிகாரிகள் தான் இந்த சிங்கங்களுக்கு பெயர் இட்டுள்ளனர் என்று மேற்கு வங்க அரசு நீதிமன்றத்தில் தெரிவித்தது.

இதை தொடர்ந்து இன்று இவ்வழக்கை விசாரித்த நீதிபதி, உங்களின் சொந்த செல்லப்பிராணிகளுக்கு அக்பர், சீதா பெயர்களை நீங்கள் சூட்டுவீர்களா? என அரசு தரப்பு வழக்கறிஞரை நோக்கி கேள்வி எழுப்பினார். மேலும், "விலங்குகளுக்கு புதிதாக வைக்கப்படவுள்ள பெயர் இந்து, கிறிஸ்தவர், இஸ்லாமியர் மத போராளிகள் மற்றும் மரியாதைக்குரியவர்களின் பெயரை இனி விலங்குகளுக்கு வைக்கவேண்டாம்" எனவும் சிங்கங்களுக்கு வேறு பெயரை வையுங்கள் என மாநில அரசிற்கு அவர் உத்தரவிட்டார்.

இதனை தொடர்ந்து அக்பர் என்ற ஆண் சிங்கத்திற்கு 'சூரஜ்' என்ற பெயரும், சீதா பெண் என்ற சிங்கத்திற்கு 'தயா' என்று புதிய பெயர்களை மேற்கு வங்காள அரசு மத்திய உயிரியல் பூங்கா ஆணையத்திடம் பரிந்துரைத்துள்ளது.

## அமேதி தொகுதியில் போட்டியிட ராகுல் காந்திக்கு தைரியம் இல்லை: ராஜ்நாத் சிங்



கேரளா, ஏப். 19

பா.ஜனதாவின் மூத்த தலைவர்களில் ஒருவரும், பாதுகாப்புத்துறை மந்திரியுமான ராஜ்நாத் சிங் இன்று கேரள மாநிலம் பத்தனம்திட்டாவில் நடைபெற்ற தேர்தல் பொதுக் கூட்டத்தில் பா.ஜனதா வேட்பாளர் அனில் கே அந்தோணியை ஆதரித்து பேசினார்.

அப்போது "கடந்த முறை அமேதி தொகுதியில் போட்டியிட்டு தோல்வியடைந்தார். மீண்டும் அமேதி தொகுதியில் போட்டியிட அவருக்கு தைரியம் இல்லை. அங்கு தோல்வியடைந்ததால் உத்தர பிரதேசத்தில் இருந்து கேரளாவிற்கு குடிபெயர்ந்துள்ளார். எனினும், வயநாடு மக்கள் இந்த முறை அவரை எம்.பி. தேர்ந்தெடுக்கமாட்டோம் என முடிவு செய்துள்ளார். இதை என்னால் கேட்க முடிகிறது" என்றார்.

ராகுல் காந்தியிடம் மீண்டும் அமேதி தொகுதியில் போட்யிடுவீர்களா? என கேட்கப்பட்டது. இதற்கு ராகுல் காந்தி கூறியதாவது:

அமேதி தொகுதி குறித்து கட்சி முடிவு எடுக்கும். கட்சியின் எந்த உத்தரவை நான் பெற்றாலும் அதற்கு கட்டுப்படுவேன். எங்களுடைய கட்சியில் இதுபோன்ற முடிவுகள் மத்திய தேர்தல் குழு கூட்டத்தில்தான் எடுக்கப்படும்.

இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்திருந்தார்.

ரேபரேலி தொகுதியில் சோனியாகாந்தி போட்டியிட்டுவந்தார். தற்போது உடல்நலத்தை கருத்தில் கொண்டு மக்களவை தேர்தலில் போட்டியிடுவதில்லை என முடிவு செய்துள்ளார். இதனால் ராஜஸ்தான் மாநிலத்தில் இருந்து மாநிலங்களவை எம்.பி.யாக தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

இதனால் ரேபரேலி தொகுதியில் பிரியங்காவின் கணவர் வதேரா போட்டியிட வாய்ப்புள்ளதாக கருதப்படுகிறது. இரண்டு தொகுதிகளிலும் காந்தி குடும்பத்தை சேர்ந்தவர்கள்தான் போட்டியிட வேண்டும் என உள்ளூர் காங்கிரஸ் தலைவர்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

ரேபரேலி மற்றும் அமேதி தொகுதிகளுக்கு காங்கிரஸ் இன்னும் வேட்பாளர் அறிவிக்காமல் உள்ளது.

# செல்போன் உரையாடல் ஒட்டு கேட்பு விவகாரம்: வெள்ளை அறிக்கை வெளியிட அ.தி.மு.க. வலியுறுத்தல்



நெல்லை, ஏப். 19

அ.தி.மு.க மாநில வக்கீல் பிரிவு செயலாளர் இன்பதுரை நெல்லையில் இன்று நிருபர்களை சந்தித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தமிழக உளவுத்துறையினர் அ.தி.மு.க தலைவர்கள் முதல் வட்ட செயலாளர்கள் வரை செல்போனில் பேசுவதை ஒட்டு கேட்கும் விவகாரம் தொடர்ந்து நடந்து வருகிறது.

இதற்காக ரூ. 40 கோடி மதிப்பில் உளவு சாதனம் ஒன்றை இறக்குமதி செய்து நாங்கள் பேசுவதை கண்காணித்து ஆளுங்கட்சியினருக்கு தகவல் தெரிவித்து வருகின்றனர்.

இது தொடர்பாக நான் தேர்தல் ஆணையத்தில் புகார் அளித்து 5 நாட்கள் ஆகிவிட்டது. தேர்தல் ஆணையமோ, உள்துறை செயலாளரோ, தமிழக முதலமைச்சரோ யாரும் இதுவரை பதில் அளிக்கவில்லை.

எனது புகார் மனு மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. நாங்கள் தேர்தல் சமயத்தில் எங்களது வெற்றிக்கு பல்வேறு வியூகங்கள் தொடர்பாக கட்சி நிர்வாகிகளுடன் உரையாடல் நடத்துவோம். அதனை உளவுத்துறையினர் ஒட்டு கேட்டு ஆளுங்கட்சியினருக்கு தகவல் தெரிவித்து வருகின்றனர்.

உளவு அமைப்பை போதை பொருட்கள் நடமாட்டம், ரவுடிகளை பிடிப்பதில் கவனம் செலுத்தாமல் அடியாட்கள் போல பயன்படுத்தி வருகின்றனர்.

இதுகுறித்து தலைமை தேர்தல் ஆணைய அதிகாரியிடம் செல்போனில் இன்று காலை தொடர்பு கொண்டு கேட்டபோது இன்று மாலைக்குள் தமிழக தேர்தல் ஆணையம் பதில் தெரிவிப்பதாக கூறியுள்ளார்கள்.

இன்று மாலைக்குள் பதில் தெரிவிக்க வேண்டும். அதே நேரத்தில் நேற்று நெல்லையில் இருந்து நாங்குநேரி வழியாக ராதாபுரம் தொகுதிக்கு ஒரு கோடி ரூபாய் மோட்டார் சைக்கிளில் கொண்டு செல்லப்பட்டுள்ளது. ராதாபுரத்தை சேர்ந்த ஒரு முக்கிய நிர்வாகிக்கு இந்த பணம் கொண்டு செல்லப்பட்ட நிலையில் அதனை பறக்கும் படையினர் சோதனை செய்யவில்லை.

அதே நேரத்தில் நாங்குநேரி போலீசில் பிடிபட்ட அந்த பணத்தின் மதிப்பு ரூ. 28 லட்சம் வரை மட்டுமே கணக்கு காட்டப்பட்டுள்ளது.

இது குறித்தும் உரிய விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த பணம் யாருடையது? எதற்காக கொண்டு செல்லப்பட்டது? என்பது குறித்து விரிவான விசாரணை தேவை. அந்த விவகாரம் தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலரான கலெக்டர் முறையான விசாரணை நடத்தி உண்மைத்தன்மையை தெரிவிக்க வேண்டும்.

அ.தி.மு.க.வினரின் செல்போன் உரையாடல்கள் ஒட்டு கேட்பு விவகாரம் தொடர்பாக தேர்தல் ஆணையத்துக்கு நான் கெடு விதிக்கிறேன்.

நான் கொடுத்த புகார் மனு மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த விவகாரம் தொடர்பாக உள்துறை செயலாளரும் வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# நீலகிரி மாவட்டத்தில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் தேர்தல் தொடர்பான பொருட்கள் வைக்கப்பட்டது: கலெக்டர் நேரில் ஆய்வு




ஊட்டி, ஏப். 19

நீலகிரி மாவட்டம், கூடலூர் புனித தாமஸ் உயர்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் தேர்தல் தொடர்பான பொருட்கள் வைக்கப்பட்டதை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் மு.அருணா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக பாராளுமன்ற பொதுத்தேர்தல் 19.04.2024 அன்று நடைபெறும் என அறிவித்ததை தொடர்ந்து, வாக்காளர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் அனைத்து பகுதிகளிலும் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின்படி, 01.04.2024 அன்று முதல் வாக்காளர்களுக்கு வீடு, வீடாகச் சென்று வாக்குச்சாவடி நிலை அலுவலர்களால் வாக்காளர்களுக்கு வாக்காளர் தகவல் சீட்டுக்கள் வழங்கும் பணிகள் நடைபெற்றது.

இன்று (19.04.2024) வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதை முன்னிட்டு, கூடலூர் புனித தாமஸ் உயர்நிலைப்பள்ளியில் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தப்படும் தேர்தல் தொடர்பான பொருட்கள் வைக்கப்பட்டதையும், அதே பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடியையும் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, வாக்குச்சாவடி மையமான கூடலூர் புனித தாமஸ் உயர்நிலைப்பள்ளியில் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக ஏற்படுத்தப்பட்டுள்ள அடிப்படை வசதிகள் குறித்தும், மாற்றுத்திறனாளிகள் சிரமமின்றி வாக்களிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள சாய்வு தளம், சக்கர நாற்காலி உள்ளிட்ட வசதிகள் குறித்தும் நேரில் பார்வையிட்டு, தன்னார்வலர்களின் விவரங்கள் குறித்து கேட்டறிந்தார்.

# திருவண்ணாமலை மற்றும் ஆரணி பாராளுமன்றத் தொகுதிகளில் பதற்றமான வாக்குச்சாவடிகளில் பயிற்சி: கலெக்டர் தகவல்




திருவண்ணாமலை, ஏப். 19

நடைபெற உள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024ஐ முன்னிட்டு திருவண்ணாமலை மற்றும் ஆரணி பாராளுமன்றத் தொகுதிகளில் பதற்றமான வாக்குச்சாவடிகள் எனக் கண்டறியப்பட்டுள்ள 239 வாக்குச் சாவடிகளில் பணிபுரியவுள்ள 126 தேர்தல் நுண் மேற்பார்வையாளர்களுக்கு அவர்களது பொறுப்பு மற்றும் கடமைகள் குறித்து திருவண்ணாமலை பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது மேற்பார்வையாளர் மகாவீர் பிரசாத் மீனா, மற்றும் ஆரணி பாராளுமன்ற தொகுதி தேர்தல் பொது மேற்பார்வையாளர் சுஷாந்த் கவுரவ் ஆகியோர் முன்னிலையில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் தெ.பாஸ்கர பாண்டியன், தலைமையில் பயிற்சி அளிக்கப்பட்டது.

இப்பயிற்சியில், நுண் மேற்பார்வையாளர்களின் கடமைகளான வாக்குச் சாவடியில் உறுதிசெய்யப்பட்ட குறைந்தபட்ச வசதிகள் உள்ளதா எனச் சரிபார்த்தல், மாதிரி வாக்கெடுப்பு நடைமுறைகள் பின்பற்றுதல் மற்றும் வாக்குச்சாவடி முகவர்கள் இருத்தலை உறுதி செய்தல் போன்ற பல்வேறு பொறுப்புகள் மற்றும் கடமைகள் குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் எடுத்துரைத்தார்.

# பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட பல்வேறு பகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களில் முன்னேற்பாடு பணிகள்: கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு



கடலூர், ஏப். 19

பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு திட்டக்குடி, ஸ்ரீ ஞானகுரு வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, வடலூர் குருகுலம் மேல்நிலைப் பள்ளி ஆகிய மையங்களில் திட்டக்குடி மற்றும் குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான 3ம் கட்ட பயிற்சிவகுப்பு நடைபெறுவதையும் மற்றும் அவர்களுக்கான பணிநியமன ஆணை வழங்கப்படுவதையும் மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் அ.அருண் தம்புராஜ் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

நெய்வேலி சட்டமன்ற தொகுதிக்கு நெய்வேலி மாவட்ட வருவாய் அலுவலர் (நில எடுப்பு) அலுவலகம், பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்கு பண்ருட்டி வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் மற்றும் கடலூர் சட்டமன்ற தொகுதிக்கு கடலூர் வருவாய் வட்டாட்சியர் அலுவலகம் ஆகிய சட்டமன்ற தொகுதிக்கான வாக்குப்பதிவு இயந்திரங்கள் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையில் இருந்து வாக்குச்சாவடி மையங்களுக்கு பிரித்தனுப்பும் பணி நடைபெறுவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் பார்வையிட்டு ஆய்வு செய்தார். மேலும், விருத்தாசலம்

சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குப்பதிவு இயந்திரங்கள் விருத்தாசலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறையினை பார்வையிட்டார்.

விருத்தாச்சலம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெரியார் நகர் பகுதியில் உள்ள இன்பேன்ட் பிரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, குறிஞ்சிப்பாடி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வடலூர் குருகுலம் மேல்நிலைப் பள்ளி, பண்ருட்டி சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட ஸ்ரீ.பி.முத்தையர் தொடக்கப் பள்ளி மற்றும் கடலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட செம்மண்டலம் பகுதியில் உள்ள சமுதாய நலக்கூடம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட தேர்தல் அலுவலர்/ கலெக்டர் பார்வையிட்டார்.

# தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குசாவடிகளில் வாக்களிக்க வருபவர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள்



தூத்துக்குடி, ஏப்.19

இந்தியத் தேர்தல் ஆணையம் தமிழ்நாடு முழுவதும் நாளை (19.04.2024) பாராளுமன்ற பொதுத்தேர்தல் நடைபெறும் என அறிவித்ததைத் தொடர்ந்து, 36.தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதியை உள்ளடக்கி 6 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள், ஏஏயுவு மற்றும் வாக்குச்சாவடி மையங்களில் பயன்படுத்தும் பொருட்கள் கொண்டு செல்லும் பணிகள் இன்று நடைபெற்று வருவதை தூத்துக்குடி வட்டாட்சியர் அலுவலகத்தில் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் கோ.லட்சுமிபதி, நேரில் சென்று பார்வையிட்டார்.

பின்னர் தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் / மாவட்ட கலெக்டர் கோ.லட்சுமிபதி, தெரிவித்ததாவது:

தூத்துக்குடி பாராளு மன்ற தேர்தல் நாளை (19.04.2024) நடைபெற உள்ள நிலையில் மொத்தம் 1674 வாக்குசாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. இவை 899 இடங்களில் அமைந்துள்ளன. இவை அனைத்தும் 6 மண்டலங்களாக பிரிக்கப்பட்டு குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளன. அந்த குழுக்கள் மூலம் வாக்குசாவடி மையங்களுக்கு வாக்குசாவடி பொருட்கள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பி வைக்கப்பட உள்ளன. இன்றைய தினம் 8000 வாக்குசாவடி அலுவலர்கள் தாங்கள் பணிபுரிய உள்ள வாக்குசாவடி மையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டு அவர்களிடம் தேர்தலுக்கு தேவையான பொருட்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தூத்துக்குடி மாவட்டத்தை பொறுத்தவரையில் 288 பதற்றமான வாக்குசாவடி மையங்கள் உள்ளதால் அந்த வாக்குசாவடி மையங்கள் உட்பட 65 சதவீதம் 1557 வாக்குசாவடி மையங்களுக்கு சிசிடிவி கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

அவை அனைத்தும் ஆட்சியர் அலுவலகத்தில் உள்ள கட்டுப்பாட்டு அறை மூலம் கண்காணிக்கப்பட உள்ளன. அந்த வாக்குசாவடி மையங்களில் ஏதாவது அசம்பாவித சம்பங்கள் ஏற்பட்டால் புகார் தெரிவிப்பதற்கு மண்டல அலுவலர்கள் மற்றும் வாக்குசாவடி அலுவலர்களுக்கு தொலைபேசி எண்கள் வழங்கப்பட்டுள்ளது. வாக்குசாவடிகளில் வாக்களிக்க வருபவர்களுக்கு குடிநீர் வசதி, கழிப்பிட வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது. தற்போது வெயில் காலம் என்பதால் சாமியானா பந்தல் அமைக்கப்பட்டுள்ளது. மாற்றுத்திறனாளிகள் வாக்களிப்பதற்கு ஒவ்வொரு வாக்குசாவடிக்கும் ஒரு சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதைத்தவிர வாக்குசாவடி மையங்களில் உதவி மையம் அமைக்கப்பட்டு வாக்குசாவடி அலுவலர்கள் வாக்களிக்க வருபவர்களுக்கு உதவி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 288 பதற்றமான வாக்குசாவடி மையங்களை கண்காணிப்பதற்கு சுழற்சி முறையில் நுண் பார்வையாளர்கள் நியமிக்கப்பட்டு இன்றைய தினம் அவர்களும் அங்கு செல்வதற்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் வாக்குப்பதிவை நேரடியாக கண்காணித்து பொது பார்வையாளர்களுக்கு அறிக்கைகளை அளிப்பார்கள். தூத்துக்குடி சட்டமன்ற தொகுதியில் ஒரு மகளிர் வாக்குசாவடி அமைக்கப்பட்டுள்ளது. இதுதவிர ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் ஒரு மாடல் வாக்குசாவடி அமைக்கப்பட்டுள்ளது என தூத்துக்குடி பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர்/மாவட்ட கலெக்டர் கோ.லட்சுமிபதி தெரிவித்துள்ளார்.

# பாராளுமன்ற பொதுத்தேர்தலை முன்னிட்டு வேலூர் பாராளுமன்ற தொகுதியில் உள்ள வாக்குச்சாவடி மையங்கள் மற்றும் வாக்குச்சாவடி அலவலர்க்களுக்கான பயிற்சி வகுப்பு



வேலூர், ஏப். 19

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024 ஐ முன்னிட்டு வேலூர் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட உள்ள ஆம்பூர், வாணியம்பாடி மற்றும் குடியாத்தம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குச்சாவடி மையங்களை மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் வே. இரா. சுப்புலெட்சுமி, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இதில் ஆம்பூர் மற்றும் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதிகளில் ஆய்வு செய்யும் போது திருப்பத்தூர் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக் டர் க.தர்ப்பகராஜ், உடனிருந்தார்.


மாவட்ட தேர்தல் அலுவலர் வாணியம்பாடி அரசு நகராட்சி மேல்நிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள வாக்குச்சாவடி எண் 121, 122 ஆகிய மாதிரி வாக்குச்சாவடி மையங்களை பார்வையிட்டு வாக்குச்சாவடி மையங்களில் ஏற்படுத்தியுள்ள குடிநீர் வசதி, கழிவறை வசதி மற்றும் மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தள நாற்காலி வசதி போன்ற வசதிகளை ஆய்வு செய்தார்.

மேலும் ஆம்பூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பகுதியில் உள்ள இந்து மகளிர் மேல்நிலைப்பள்ளி, ஆம்பூர் நகராட்சி நடுநிலைப்பள்ளியில் அமைக்கப்பட்டுள்ள மாதிரி வாக்குச்சாவடி மையத்தை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

மேலும் அனைத்து வாக்குச்சாவடிகளிலும் அடிப்படை தேவைகளான குடிநீர் மற்றும் கழிவறை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டு சம்பந்தப்பட்ட அலுவலர்களை உறுதி செய்யும்படி அறிவுறுத்தினார்.

முன்னதாக மாவட்ட தேர்தல் அலுவலர் அணைக்கட்டு சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடிகளில் பணிபுரிய உள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கான மூன்றாம் கட்ட பயிற்சி நடைபெறும் ஸ்பார்க் மெட்ரிக்குலேசன் பள்ளியில் ஆய்வு மேற்கொண்டு தேர்தல் பணியில் ஈடுபடவுள்ள வாக்குச்சாவடி அலுவலர்களுக்கு ஆணைகளை வழங்கும் பணியை பார்வையிட்டு ஆலோசனை வழங்கினார்.

# மாரியம்மன் கோவில் ஊராட்சியில் முன் மாதிரியான வாக்குவாசடி மையம்



தஞ்சாவூர், ஏப்.19

நாடாளுமன்ற தேர்தல் தமிழகம் மற்றும் புதுச்சேரியில் ஒரே கட்டமாக இன்று (19ம் தேதி) நடைபெற உள்ளது. இதையொட்டி தஞ்சை மாவட்ட நிர்வாகம் சார்பில் பல்வேறு முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக தஞ்சை மாவட்டம் மாரியம்மன் கோவில் ஊராட்சியில் உள்ள அரசு பெண்கள் மேல்நிலை பள்ளி, அரசு தொடக்கப்பள்ளி மற்றும் மாரியம்மன் கோவில் ஊராட்சிக்கு உட்பட்ட ஞானம் நகர் தனியார் பள்ளி ஆகியவற்றில் பொதுமக்கள் வாக்குப் பதிவுச் செய்ய ஏதுவாக துணிகளில் அலங்கார பந்தல் போடப்பட்டுள்ளது. மாரியம்மன் கோவில் ஊராட்சியில் அந்த 3 பள்ளிகளில் வாக்காளர்கள் வாக்கு செலுத்துவார்கள்.

/இந்த நிலையில் அந்த வாக்கு சாவடி மையங்களில் பெண்கள், முதியவர்கள், மாற்றுதிறனாளிகள் வாக்கு செலுத்த எந்த ஒரு கஷ்டங்களும் படாத நிலையில் பந்தல், குடிநீர் வசதி, கழிவறை வசதி, மின் விசிறி, மின் விளக்கு போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் செய்யப்பட்டு முன் மாதிரியான வாக்கு சாவடிகளாக மாரியம்மன் ஊராட்சி மன்றம் சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தஞ்சை நாடாளுமன்ற தொகுதிகளில் உள்ள வாக்குசாவடிகளில் எந்த ஒரு வாக்குசாவடிகளிலும் இல்லாத அளவிற்கு மாரியம்மன் ஊராட்சியில் உள்ள வாக்கு சாவடி முன் மாதிரியான வாக்கு சாவடியாக உள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக மாரியம்மன் ஊராட்சியில் அனைத்து தேர்தல்களிலும் இது போன்று வாக்கு சாவடி அமைக்கப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது. இந்த வாக்கு சாவடிகளில் சுமார் 12 ஆயிரத்து 200 வாக்காளர்கள் வாக்கு அளிக்க உள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சேலம் மக்களவைத் தொகுதிக்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பும் பணி: கலெக்டர் ஆய்வு

சேலம், ஏப் .19

மக்களவைப் பொதுத் தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறவுள்ளதை முன்னிட்டு, சேலம் மக்களவைத் தொகுதிக்கான வாக்குச்சாவடி மையங்களுக்கு மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவிற்குத் தேவையான பொருட்கள் அனுப்பும் பணியினை சேலம், கணேஷ் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் இரா. பிருந்தாதேவி, நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மக்களவைப் பொதுத் தேர்தல் 2024க்கான வாக்குப்பதிவு நாளையதினம் 19.04.2024, வெள்ளிக்கிழமை நடைபெறவுள்ளது. வாக்குச்சாவடிகளுக்கு தேவையான பொருட்களை எடுத்துச் செல்லும் மண்டல அலுவலர்கள் அந்தந்த வாக்குச் சாவடிகளுக்குரிய பொருட்களை அதற்கான பொறுப்பு அலுவலர்களிடமும் நேரில் ஒப்படைத்திட வேண்டுமென அறிவுறுத்தப்பட்டது.

இந்த ஆய்வின்போது, மாநகராட்சி ஆணையாளர் சீ.பாலச்சந்தர், மாவட்ட வருவாய் அலுவலர் மரு.பெ. மேனகா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) எம்.ஜெகநாதன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) சிவசுப்பிரமணியன் உள்ளிட்ட தொடர்புடைய உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

# வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்துவற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவிற்கு தேவையான பொருட்களை வாகனங்கள் மூலம் கொண்டு செல்லும் பணிகள்

ஈரோடு, ஏப். 19

பாராளுமன்ற பொதுத் தேர்தல் 2024யையொட்டி, ஈரோடு மாநகராட்சி அலுவலகத்தில், ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் ராஜ கோபால் சுன்கரா, வாக்குசாவடி மையங்களில் வாக்குப்பதிவு நாளன்று பயன்படுத்துவற்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவிற்கு தேவையான பொருட்களை வாகனங்கள் மூலம் கொண்டு செல்லும் பணிகளை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, ஈரோடு மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது,

இந்திய தேர்தல் ஆணையத்தால், நாடாளுமன்ற பொதுத் தேர்தல் அறிவிக்கப்பட்டு தமிழ்நாட்டில் ஏப்ரல் 19 அன்று நடைபெறவுள்ளது. ஈரோடு மாவட்டத்தில் நாடாளுமன்ற தேர்தல் 2024யை முன்னிட்டு, 10,970 அலுவலர்கள் தேர்தல் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். முதன்மை அலுவலர்கள், முதல் நிலை, இரண்டாம்நிலை, மூன்றாம் நிலை அலுவலர்களுக்கான 3வது கட்ட பயிற்சி இன்று (18.04.2024) நடைபெற்றது. இப்பயிற்சியில் முதன்மை அலுவலர்கள், முதல்நிலை, இரண்டாம் நிலை, மூன்றாம் நிலை அலுவலர்கள் வாக்குச்சாவடி மையத்தில் பணிபுரிவதற்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது.

வாக்குச்சாவடி மையங்களில் பணியாற்றும் அலுவலர்களுக்கு இரவு தங்குவதற்கு தேவையான அனைத்து அடிப்படை வசதிகளும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஈரோடு பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 97 குமாரபாளையம், 98 ஈரோடு கிழக்கு, 99 ஈரோடு மேற்கு, 100 மொடக்குறிச்சி, 101 தாராபுரம் (தனி), 102 காங்கேயம் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் உள்ள 1688 வாக்குச்சாவடி மையங்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவிற்கு



தேவையான பொருட்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களுக்கு வாகனங்களில் கொண்டு செல்லும் பணிகள் நடைபெற்று வருகிறது. மேலும் வாக்குப்பதிவு முடிவடைந்தவுடன் வாக்குப்பதிவு இயந்திரங்களை வாக்கு எண்ணும் மையமான சித்தோடு,

ஈரோடு அரசினர் பொறியியல் கல்லூரியில் பாதுகாப்பாக வைப்பதற்கு அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஈரோடு மாவட்ட ஆட்சியரகத்தில் அமைக்கப்பட்டுள்ள தேர்தல் கட்டுப்பாட்டு அறையில் அந்தந்த தொகுதியில் உள்ள உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் ஒவ்வொரு 2 மணிநேரத்திற்கும் வாக்குப்பதிவு சதவீதத்தை பதிவு செய்வார்கள். மேலும், வீடியோ கண்காணிப்பு குழுக்கள், பறக்கும்படை குழுக்கள் தீவிரப்படுத்தப்பட்டு, கண்காணிக்கப்பட்டு வருகிறது. ஈரோடு மாவட்டத்தில் சுமார் ரூ.5.62 கோடி மதிப்பீட்டிலான பொருட்கள் மற்றும் பணம் பறிமுதல் செய்யப்பட்டு, மேலும், மாவட்டம் முழுவதும் 1476 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நாள் அன்று 191 பதற்றமான வாக்குச்சாவடிகளை கண்காணிக்க எல்.ஐ.சி, தபால் நிலைய அலுவலர்கள், தேசியமயமாக்கப்பட்ட வங்கி அலுவலர்கள் தேர்தல் நுண்பார்வையாளர்களாக நியமிக்கப்பட்டு, கண்காணிப்பு பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர். ஈரோடு மாவட்டத்தில் கடந்த தேர்தலைவிட இந்த தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவு நடைபெற பொதுமக்கள் முழு ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என தெரிவித்தார்.

# விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நடத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகள்: கலெக்டர் தகவல்

கன்னியாகுமரி, ஏப். 19

கன்னியாகுமரி பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் இன்று (19.04.2024) நடைபெறுவதையொட்டி அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் அலுவலகத்திலிருந்து நாகர்கோவில் சட்டமன்றத்திற்குட்பட்ட வாக்குச்சாவடி மையங்களுக்கு தேர்தல் பயன்பாட்டிற்கு தேவையான பொருட்கள் அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பி.என்.ஸ்ரீதர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில்

கன்னியாகுமரி பாராளுமன்ற பொதுத்தேர்தல் மற்றும் விளவங்கோடு சட்டமன்ற தொகுதி இடைத்தேர்தல் நாளை



நடைபெறவுள்ளது. வாக்குப்பதிவு நாளை காலை 7 மணி முதல் மாலை 6 மணி வரை நடைபெறும். பொதுமக்கள் 13 வகையான ஆவணங்களில் ஏதாவது ஒன்றினை வாக்குப்பதிவு மையங்களுக்கு கொண்டு சென்று வாக்களிக்கலாம். நமது மாவட்டத்தில் 1698 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டள்ளது. இந்த வாக்குச்சாவடி மையங்களில் 8152 அலுவலர்கள் பணியாற்ற உள்ளார்கள். வாக்குச்சாவடி அலுவலர்கள் மற்றும் தேர்தல் பணியாளர்கள் எளிதில் வாக்குச்சாவடிக்கு செல்ல ஏதுவாக 5 வாகனங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தொகுதிக்கும் 5 தேர்தல் பணியாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

அனைத்து வாக்குச்சாவடி மையங்களிலும் அனைத்து அடிப்படை வசதிகளும் மண்டல தலைவர்கள் மூலம் உறுதி செய்யப்பட்டுள்ளது. 1104 வாக்குச்சாவடி மையங்களில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டுள்ளது. இதில் 199 பதட்டமான வாக்குச்சாவடி மையங்கள் அடங்கும்.

இந்த பதட்டமான வாக்குச்சாவடி மையங்களை நுண்பார்வையாளர்கள் மூலம் கண்காணிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. 650 வாக்குச்சாவடி மையங்களில் மாற்றுத்திறனாளிகள் வாக்குச்சாவடிக்குள் சென்று வாக்களிக்க ஏதுவாக ஒரு தன்னார்வலர் மற்றும் சக்கர நாற்காலி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. ஒரு சட்டமன்ற தொகுதிக்கு ஒரு மாதிரி வாக்குச்சாடிகளும், பெண்கள் மட்டுமே பணியாற்றும் ஒரு வாக்குச்சாவடிகளும் அமைக்கப்பட்டுள்ளது. 18 வயது நிரம்பிய வாக்குரிமை பெற்ற அனைத்து வாக்காளர்களும் வாக்குச்சாவடிகளுக்கு சென்று வாக்களித்து உங்களுடைய ஜனநாயக கடமையினை ஆற்ற வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். இவ்வாறு மாவட்ட தேர்தல் நடத்தும் அலுவலர் மற்றும் மாவட்ட கலெக்டர் பி.என். ஸ்ரீதர், தெரிவித்தார்கள்.

# 1,934 வாக்குப்பதிவு மையங்கள் மாவட்ட கலெக்டர் தகவல்

இராமநாதபுரம், ஏப். 19

இராமநாதபுரத்தில் இராமநாதபுரம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் சேமிப்பு கிடங்கிலிருந்து வாக்குப் பதிவு மையங்களுக்கு காவல்துறை பாதுகாப்புடன் எடுத்துச் செல்லும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் பார்வையிட்டு தெரிவிக்கையில்,

இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்கான வாக்குப்பதிவு நாளை 19.04.2024 காலை 7 மணிக்கு துவங்கி மாலை 6 மணி வரை நடைபெறுவதையொட்டி வாக்குப் பதிவு மையங்களுக்கான மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகள்,



ஏஏயுவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவு மையங்களுக்கான படிவங்கள் உள்ளிட்ட உபகரணங்கள் இன்று அனைத்து வாக்குப்பதிவு மையங்களுக்கும் அந்தந்த சட்டமன்றத் தொகுதியிலிருந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

இராமநாதபுரம் பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட அறந்தாங்கி, திருச்சுழி, பரமக்குடி (தனி), திருவாடானை, இராமநாதபுரம், முதுகுளத்தூர் ஆகிய 6 சட்டமன்ற தொகுதிகளில் 1,934 வாக்குப்பதிவு மையங்கள் செயல்படவுள்ளன. அனைத்து மையத்திலும் போதியளவு குடிநீர் வசதி, கழிப்பறை வசதி அமைக்கப்பட்டுள்ளதுடன், மாற்றுத்திறனாளிகள் மற்றும் முதியோர்கள் வாக்களிக்க ஏதுவாக சாய்தள வசதிகளும் சக்கர நாற்காலிகளும் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் 6 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட வாக்குப்பதிவு மையங்களுக்கு போதியளவு பயன்பாட்டிற்கு ஏதுவாக 4,640 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள், 2,320 கட்டுப்பாட்டு கருவிகள், 2,514 ஏஏயுவு கருவிகள் தயார் நிலையில் உள்ளது.

அதேபோல் 8,02,317 ஆண் வாக்காளர்கள், 8,15,292 பெண் வாக்காளர்கள், 79 மூன்றாம் பாலினத்தவர்கள் என மொத்தம் 16,17,688 வாக்காளர்கள் வாக்களிக்க உள்ளனர். வாக்குப்பதிவுக்கான அனைத்து பணிகளும் தயார் நிலையில் உள்ளது. வாக்காளர்கள் அனைவரும் நாளை வாக்குப்பதிவு மையத்திற்கு சென்று வாக்களித்து 100மூ வாக்களிக்கப்பட்டது என்ற நிலையை உருவாக்கிட வேண்டுமென மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் பா.விஷ்ணு சந்திரன் தெரிவித்துள்ளார்.

# வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பும் பணிகள் மாவட்ட கலெக்டர் நேரில் பார்வையிட்டு ஆய்வு

மயிலாடுதுறை, ஏப். 19

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் இருந்து மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலையொட்டி வாக்குச்சாவடிகளுக்கு மயிலாடுதுறை மாவட்ட கலெக்டர்/மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம், பாபநாசம், திருவிடைமருதூர் மற்றும் மயிலாடுதுறை ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் இருந்து மயிலாடுதுறை பாராளுமன்ற தேர்தலையொட்டி வாக்குச்சாவடிகளுக்கு வாக்குப்பதிவு இயந்திரங்கள் அனுப்பும் பணிகளை மயிலாடுதுறை மாவட்ட ஆட்சியர்/மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஏ.பி.மகாபாரதி பார்வையிட்டு ஆய்வு



செய்தார்கள்.

பின்னர், தேர்தல் நடத் தும் அலுவலர் தெரிவித்ததாவது:

மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதி தேர்தல் இன்று (19.04.2024) காலை 07.00 மணி முதல் மாலை 06.00 மணி வரை வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. இதனை முன்னிட்டு, மயிலாடுதுறை பாராளுமன்ற தொகுதிக்குட்பட்ட 160. சீர்காழி சட்டமன்ற தொகுதியில் 288 வாக்குச்சாவடிகளுக்கும், 161.மயிலாடுதுறை சட்டமன்ற தொகுதியில் 266 வாக்குச்சாவடிகளுக்கும், 162. பூம்புகார் சட்டமன்ற தொகுதியில் 306 வாக்குச்சாவடிகளுக்கும், தஞ்சாவூர் மாவட்டத்தில் 170.திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதியில் 293 வாக்குச்சாவடிகளுக்கும்;, 171.கும்பகோணம்; சட்டமன்ற தொகுதியில் 289 வாக்குச்சாவடிகளுக்கும்;, 172.பாபநாசம் சட்டமன்ற தொகுதியில் 301 வாக்குச்சாவடிகளுக்கும்; ஆக மொத்தம் 1743 வாக்குச்சாவடிகளுக்கு 3486 வாக்குப்பதிவு இயந்திரங்களும், 1743 கட்டுப்பாட்டு கருவியும், 1743 வாக்குப்பதிவு சரிபார்க்கும் இயந்திரமும் அனுப்பப்படுகிறது.

மயிலாடுதுறை மாவட்டத்தில் தேர்தலை எதிர்கொள்ள ஏதுவாக வாக்குப் பதிவு அலுவலர்கள் 4213 ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பணியில் ஈடுப்படுத்தப்பட உள்ளனர். சட்டம் ஒழுங்கு பணிகளை மேற்கொள்ள ஏதுவாக மாவட்டத்தில் 85 மண்டல அலுவலர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர், பாபநாசம்,கும்பகோணம், ஆகிய சட்டமன்ற தொகுதிகளில் தேர்தலை எதிர்கொள்ள ஏதுவாக வாக்குப்பதிவு அலுவலர்கள் 4346 ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் பணியில் ஈடுப்படுத்தப்பட்டுள்ளனர்.

தேர்தலை சிறப்பாக நடத்துவதற்கு தேவையான அனைத்து முன்னேற்பாடு பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வாக்காளர்கள் அனைவரும் வாக்களிக்க தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது என தேர்தல் நடத்தும் அலுவலர் தெரிவித்தார்.

# மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவுக்கு தேவையான பொருட்கள் வாக்குச்சாவடிகளுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணிகள்

திண்டுக்கல், ஏப். 19

பாராளுமன்ற பொதுத்தேர்தல் 2024 ஐ முன்னிட்டு, திண்டுக்கல் மாவட்டம், ஆத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் இருந்து வாக்குப்பதிவு மையங்களில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவுக்குத் தேவையான பொருட்கள் வாக்குச்சாவடிகளுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணியினை மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி ஆய்வு மேற்கொண்டார்.

இந்த ஆய்வின்போது, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி தெரிவித்ததாவது:

திண்டுக்கல் மாவட்டத்தில், 127 பழனி சட்டமன்ற தொகுதியில் 323 வாக்குச்சாவடி மையங்கள், 128 ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதியில் 282 வாக்குச்சாவடி மையங்கள், 129 ஆத்தூர் சட்டமன்ற தொகுதியில் 320 வாக்குச்சாவடி மையங்கள், 130 நிலக்கோட்டை சட்டமன்ற தொகுதியில் 270 வாக்குச்சாவடி மையங்கள், 131 நத்தம் சட்டமன்ற தொகுதியில் 327 வாக்குச்சாவடி மையங்கள், 132 திண்டுக்கல் சட்டமன்ற தொகுதியில் 290 வாக்குச்சாவடி மையங்கள், 133வேடசந்தூர் சட்டமன்ற தொகுதியில் 309 வாக்குச்சாவடிகள் என மொத்தம் 2121 வாக்குச்சாவடி மையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மொத்தம் 18,77,414 வாக்காளர்கள் வாக்குப்பதிவு செய்யவுள்ளனர்.

வாக்குச்சாவடி மையங்களில் வாக்குப்பதிவுக்கு



பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரம், கட்டுப்பாட்டு இயந்திரம், வாக்குப்பதிவினை உறுதி செய்யும் இயந்திரம், பச்சை காகித முத்திரை, வெளிப்புற காகித முத்திரை, கட்டுப்பாட்டு கருவிக்கான முகவரி சீட்டு, வாக்குப்பதிவு இயந்திரத்திற்கான முகவரி சீட்டு, சிறப்புச் சீட்டு, வாக்காளர் பட்டியல், வாக்காளர் தகவல் சீட்டு, அழியாத மை, முத்திரை, வெண்கல முக்கோண முத்திரை, வாக்காளர்கள் தங்களது வாக்குப்பதிவினை ரகசியமாக செய்வதற்கு ஏற்படுத்தவேண்டிய தடுப்பு அட்டை,

வேட்பாளர்கள் விவரம் குறித்த சுவரொட்டி, வாக்குப்பதிவு மையம் குறித்த சுவரொட்டி, வாக்குச்சாவடி அலுவலர் குறிப்பேடு, வாக்காளர்களின் விவரம் எழுதும் படிவங்கள், முகவர்களுக்கான அடையாள அட்டை, முகவர்களுக்கான படிவங்கள், முகவர்களிடம் கையொப்பமிடும் படிவங்கள் போன்றவைகளை பாதுகாப்புடன் வைப்பதற்கான உறைகள், எழுதுபொருட்களுக்கான பேனா, பென்சில், அழிப்பான், வெள்ளைத்தாள், பிளேடு, மெழுகுவர்த்தி, நூல், காதி நூல், துணி நூல் பை, கார்பன் சீட் உட்பட 131 பொருட்கள் அடங்கிய பைகள், வாக்குச்சாவடி மையம் வாரியாக தொகுத்து, பிரித்து வைக்கும் பணிகள் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்டு, 2121 வாக்குச்சாவடிகளுக்கு தேவையான 2121 தொகுப்பு மற்றும் இருப்பிற்காக 210 தொகுப்பு என மொத்தம் 2331 தொகுப்புகள் தயார்படுத்தப்பட்டுள்ளன.

மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவுக்குத் தேவையான பொருட்கள் வாக்குச்சாவடிகளுக்கு பாதுகாப்புடன் அனுப்பி வைக்கப்பட்டு, வாக்குச்சாவடிகள் தயார்நிலையில் உள்ளன.

சுதந்திரமான மற்றும் நியாயமான முறையில் தேர்தல் நடப்பதை உறுதிப்படுத்துவதற்கும், தாய்த் திருநாட்டின் புனிதத்தன்மையை தொடர்ந்து நிலைநிறுத்துவதற்கு, பொதுத்தேர்தல் அமைதியான முறையில் நடைபெறுவதற்கு நமது கடமைகளை ஆர்வத்துடனும், நேர்மையாகவும் செயல்படுத்தி, அனைவரும் ஒத்துழைப்பு வழங்கிட வேண்டும் என மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட கலெக்டர் மொ.நா.பூங்கொடி, தெரிவித்தார்.

# 6323 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் துணை ராணுவ பாதுகாப்புடன் வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பி வைக்கும் பணிகள்: மாவட்ட கலெக்டர் ஆய்வு

அரியலூர், ஏப். 19

அரியலூர் மாவட்டம், அரியலூர் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் 27.சிதம்பரம் (தனி) பாராளுமன்ற தொகுதி தேர்தலில் பயன்படுத்தப்படவுள்ள மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்புடைய வாக்குச்சாவடிகளுக்கு துணை ராணுவ பாதுகாப்புடன் அனுப்பி வைக்கும் பணிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர் ஜா.ஆனி மேரிஸ்வர்ணா, நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்திய நாடாளுமன்ற தேர்தலையொட்டி தமிழகத்தில் முதல் கட்டமாக நாளை ஏப்ரல் 19ஆம் தேதி வாக்குப்பதிவு நடைபெறுகிறது. அந்தவகையில் 27.சிதம்பரம் (தனி) நாடாளுமன்ற தொகுதியில் 7,53,643 ஆண் வாக்காளர்களும், 7,66,118 பெண் வாக்காளர்களும், 86 மூன்றாம் பாலின வாக்காளர்களும் சேர்த்து மொத்தம் 15,19,847 வாக்காளர்கள் நடைபெறவுள்ள தேர்தலில் வாக்களிக்க உள்ளனர். அதன்படி குன்னம் சட்டமன்ற தொகுதியில் 320 வாக்குசாவடிகளிலும், அரியலூர் சட்டமன்ற தொகுதியில்



306 வாக்குசாவடிகளிலும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதியில் 290 வாக்குச்சாவடிகளிலும், புவனகிரி சட்டமன்ற தொகுதியில் 283 வாக்குச்சாவடிகளிலும், சிதம்பரம் சட்டமன்ற தொகுதியில் 260 வாக்குச்சாவடிகளிலும், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதியில் 250 வாக்குச்சாவடிகளிலும் என மொத்தம் 1709 வாக்குச்சாவடிகளில் வாக்காளர்கள் தங்களது வாக்கினை செலுத்த உள்ளனர். மேலும், வாக்குப்பதிவு பணிகளுக்காக 1709 வாக்குச்சாவடிகளில் 8259 வாக்குச்சாவடி அலுவலர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

வாக்குப்பதிவிற்கு தேவையான 2051 வாக்குப்பதிவு இயந்திரங்களும் ( ), 2051 கட்டுப்பாட்டு கருவிகளும் ( ), 2221 தாம் பதிவு செய்த வாக்கினை உறுதி செய்யும் கருவிகளும் () என மொத்தம் 6323 மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் தொடர்புடைய வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர் அலுவலகங்களின் பர்துகாப்பு அறையில் வைக்கப்பட்டுள்ளது. இதில் குன்னம் சட்டமன்ற தொகுதிக்கு 1184 இயந்திரங்களும், அரியலூர் சட்டமன்ற தொகுதிக்கு 1131 இயந்திரங்களும், ஜெயங்கொண்டம் சட்டமன்ற தொகுதிக்கு 1073 இயந்திரங்களும், புவனகிரி சட்டமன்ற தொகுதிக்கு 1048 இயந்திரங்களும், சிதம்பரம் சட்டமன்ற தொகுதிக்கு 962 இயந்திரங்களும், காட்டுமன்னார்கோவில் சட்டமன்ற தொகுதிக்கு 925 இயந்திரங்களும் என மொத்தம் 6323 இயந்திரங்கள் காவல்துறை மற்றும் துணை இராணுவ பாதுகாப்புடன் தொடர்புடைய வாக்குச்சாவடிகளுக்கு அனுப்பப்பட்டு வருகின்றது. மேலும் 06 சட்டமன்ற உதவி தேர்தல் நடத்தும் அலுவலர்கள் கட்டுப்பாட்டில் உள்ள மின்னணு இயந்திரங்கள் வைக்கப்பட்டுள்ள பாதுகாப்பு அறைகள் வேட்பாளர்களின் முகவர்கள் முன்னிலையில் சீல் அகற்றப்பட்டு மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் வாக்குசாவடிகளுக்கு கொண்டு செல்லும் அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. 06 சட்டமன்ற தொகுதிகளிலும் மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்கள் மற்றும் வாக்குப்பதிவு பொருட்கள் ஆகியவை சம்மந்தப்பட்ட மண்டல அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, துணை ராணுவம் மற்றும் காவல்துறை பாதுகாப்புடன் தொடர்புடைய வாக்கு சாவடிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது என மாவட்ட தேர்தல் அலுவலர் / சிதம்பரம் பாராளுமன்ற தொகுதி தேர்தல் நடத்தும் அலுவலர். ஜா.ஆனிமேரிஸ்வர்ணா, தெரிவித்தார்.

இந்நிகழ்வில் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், வட்டாட்சியர் ஆன்ந்தவேல். அரசு அலுவலர்கள், காவல்துறையினர் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# சொத்து தகராறில் தம்பி கொலை: அண்ணனுக்கு போலீஸ் வலை

ஸ்ரீவில்லிபுத்தூர், ஏப். 19

ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே உள்ள வன்னியம்பட்டி மேல தெருவில் வசிப்பவர் கடற்கரை வயது 81 இவரது மனைவி பல வருடங்களுக்கு முன்பு இறந்துவிட்ட நிலையில் இவர் தனது மகன்களான பாலமுருகன் (37) தர்மராஜா (35) ஆகிய இருவருடன் ஒரே வீட்டில் வசித்து வந்தார் இதில் பாலமுருகனுக்கும் தர்மராஜாக்கும் திருமணம் ஆகவில்லை இந்த நிலையில் கடற்கரை தனது 2 மகன்களுக்கும் சொத்தை பிரித்து தருவது தொடர்பாக தகராறு இருந்து வந்துள்ளது இந்த நிலையில் 18 ஆம் தேதி அதிகாலை நாலு மணிக்கு மேல் தர்மராஜா தூங்கிக் கொண்டிருக்கும்போது அம்மி கல்லால் தாக்கப்பட்டு இரத்த வெள்ளத்தில் வீட்டின் சமையலறையில் பிணமாக கிடந்தார் இது குறித்து வன்னியம்பட்டி போலீசார் வழக்கு பதிவு செய்து தர்மராஜன் உடலை மீட்டு ஸ்ரீவில்லிபுத்தூர் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்கு அனுப்பி வைத்தனர் இந்த நிலையில் பாலமுருகன் தலைமறைவாகியுள்ளார் இதனால் தனது தம்பியை அவர்தான் கொலை செய்து இருக்கலாம் என்ற கோணத்தில் போலீசார் தீவிர விசாரணை தேடுகின்றனர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# ஹனுமேன் பட நாயகனின் புதுப்பட அப்டேட்




2011 ஆம் ஆண்டு சாம்பி ரெட்டி படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமாகினார் தேஜா சஜ்ஜா . தெலுங்கு சினிமாவில் வளர்ந்து வரும் நடிகர்களுள் ஒருவர் . பிரசாந்த வர்மா இயக்கத்தில் இந்தாண்டு ஜனவரி மாதம் வெளியான திரைப்படம் அனுமன்.

அமிர்த்தாஐயர்,வரலட்சுமிசரத்குமார்,சமுத்திரகனி, வினய் ராய் போன்ற முன்னணி நடிகர்கள் நடித்திருந்தனர். இத்திரைப்படம் மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பை பெற்றது. இதுவரை இப்படம் 330 கோடி ரூபாய் வசூலித்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதைத்தொடர்ந்து தேஜா சஜ்ஜாவின் அடுத்த படமான மிராய் என்ற படத்தில் நடிக்கவுள்ளார். இப்படத்தை ஒளிப்பதிவாளர் மற்றும் இயக்குனரான கார்த்திக் கட்டாமானேனி இயக்கவுள்ளார். பீபில் மீடியா ஃபேக்டரி மிராய் படத்தை தயாரிக்கவுள்ளனர். படத்தின் ஃபர்ஸ்ட் லுக் போஸ்ட்ரையும் பட முன்னோட்டத்தையும் படக்குழுவினர் வெளியிட்டனர். இப்படம் பேரரசரான அசோகன் மற்றும் அவரது 9 ரகசியங்களை பற்றிய கதையாகும். 2025 ஆம் ஆண்டு ஏப்ரல் 18 ஆம் தேதி வெளியாகவுள்ளது. தமிழ், கன்னடம், மலையாளம், இந்தி என அனைத்து மொழிகளிலும் 2டி மற்றும் 3டியில் வெளியாகவுள்ளது.

# சித்தார்த் பிறந்தநாளை ஒட்டி சிறப்பு போஸ்டர் வெளியிட்ட இந்தியன் 2 படக்குழு




பிரம்மாண்ட இயக்குநர் ஷங்கர் இயக்கத்தில் 1996 ல் நடிகர் கமல்ஹாசன் இரட்டை வேடத்தில் நடித்த 'இந்தியன்' திரைப்படம் 28 ஆண்டுகளுக்கு முன் வெளியாகி வெற்றி பெற்றது. மேலும் ரசிகர்களிடம் இப்படம் பெரும் வரவேற்பு பெற்று வசூல் சாதனை படைத்தது.

இந்நிலையில் இந்தியன் 2 படத்தின் மீதான எதிர்பார்ப்பு ரசிகர்களிடம் அதிகரித்தது. இதைத்தொடர்ந்து இயக்குநர் ஷங்கர் 'இந்தியன் 2' படத்தில் கமலை மீண்டும் கதாநாயகனாக இயக்க தொடங்கினார்.

இப்படத்தை லைக்கா மற்றும் ரெட் ஜெயண்ட் மூவிஸ் நிறுவனம் இணைந்து தயாரித்தன.

இதில் காஜல் அகர்வால், சித்தார்த், ரகுல் ப்ரீத் சிங், பிரியா பவானி சங்கர், சமுத்திரக்கனி, பாபி சிம்ஹா, டெல்லி கணேஷ், ஜெயபிரகாஷ், குரு சோமசுந்தரம், வெண்ணிலா கிஷோர், ஜார்ஜ் மரியான், உள்ளிட்ட பலர் நடித்தனர். இந்த படத்திற்கு அனிருத் இசையமைத்துள்ளார். இந்த படத்தின் படப்பிடிப்பு முடிவடைந்து இறுதி கட்டப்பணிகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், நடிகர் சித்தார்த் பிறந்தநாளை ஒட்டி இன்று அவரது சிறப்பு போஸ்டரை இந்தியன் 2 படக்குழு வெளியிட்டுள்ளது.

# ரீரிலீசுக்கு தயாராகும் மங்காத்தா




வெங்கட் பிரபு தற்பொழுது விஜய் நடிக்கும் கோட் திரைப்படத்தை இயக்கி வருகிறார். கோட் திரைப்படம் இந்தாண்டு செப்டம்பர் 5 ஆம் தேதி வெளியாகவுள்ளது. படத்தின் முதல் பாடலான விசில் போடு சில நாட்களுக்கு முன் வெளியாகி மிக வைரலானது.

வெங்கட் பிரபு இயக்கும் படங்கள் அனைத்தும் காமெடிக் கலந்து வித்தியாசமான கதைக்களத்துடன் இருக்கும். அந்த வகையில் 2011 ஆம் ஆண்டு அஜித், திரிஷா, அர்ஜூன், பிரேம்ஜி, அரவிந்த் ஆகாஷ், மகத், என பலர் நடித்து வெளியான திரைப்படம் மங்காத்தா.

இன்ஸ்பக்டர் விநாயக் மகாதேவ் என்ற கதாப்பாத்திரத்தில் நடிகர் அஜித் மிகவும் மாறுபட்ட நடிப்பை வெளிப்படுத்திருப்பார். ஒரு கடத்தல்காரனை தப்பிக்க விட்டதற்காக அவரை ச்ஸ்பண்ட் செய்து விடுவார்கள். அப்பொழுது அவர் ஒரு கும்பலை சந்திக்கிறார். அவர்கள் 500 கோடி ரூபாய் பணத்தொகையை கடத்த திட்டம் போடுகிறார்கள். அதற்கு அஜித் உதவுவதாக கூறுவார் அதற்கு அடுத்து என்ன நடந்தது என்பதே கதைக்களம்.

இப்படத்திற்கு யுவன் ஷங்கர் ராஜா இசையமைத்தார். படத்தின் பின்னணி இசை மிரட்டலாக இருக்கும். படத்தில் இடம் பெற்றுள்ள ஸ்டண்ட் காட்சிகளும், அஜித் ஒற்றை வீலில் பைக் ஓட்டும் காட்சிகள் மக்களை பிரமிக்க வைத்தது. மே 1 ஆம் தேதி அஜித் குமார் 53 வது பிறந்தநாளை கொண்டாடவுள்ளார். அதை மேலும் சிறப்பிக்கும் வகையில் மங்காத்தா படத்தை மீண்டும் ரிலீஸ் செய்ய பட்க்குழு திட்டமிட்டுள்ளனர். இதனால் அஜித் ரசிகர்கள் மிகுந்த உற்சாகத்தில் உள்ளனர்.

# ஜாதியை உருவாக்குனவங்க தான் இந்தியாவை உருவாக்குனாங்க கவனம் ஈர்க்கும் மனுசி டிரைலர்



தமிழ் சினிமாவில் அறம் படம் மூலம் அறிமுகமானவர் இயக்குநர் கோபி நயினார். இவர் இயக்கிய அறம் படம் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பை பெற்றது. இந்த படத்தில் நயன்தாரா முதன்மை பாத்திரத்தில் நடித்திருந்தார்.

இயக்குநர் கோபி நயினாரின் அடுத்த படம் "மனுசி" என்ற தலைப்பில் உருவாகி இருக்கிறது. இந்த படத்தை வெற்றி மாறன் தயாரித்துள்ளார். இயக்குநரின் முதல் படத்தை போன்றே இந்த படமும் கதாநாயகிக்கு முக்கியத்துவம் கொடுக்கும் கதையை கொண்டிருக்கிறது. இதில் ஆன்ட்ரியா ஜெர்மியா நடித்துள்ளார்.

இளையராஜா இசையமைத்துள்ள மனுசி படத்தின் டிரைலரை நடிகர் விஜய் சேதுபதி தனது அதிகாரப்பூர்வ எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். இந்த படம் தொடர்பான அடுத்தடுத்த தகவல்கள் விரைவில் அறிவிக்கப்படும் என்று தெரிகிறது.

இப்படத்தில் நடிகர் நாசர், தமிழ் மற்றும் ஹக்கிம் ஷா முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர். அறம் படத்தை போன்றே இப்படமும் சமூக பிரச்சினைகளை பேசும் கதைக்களம் கொண்டிருக்கும் என்பது டிரைலரில் தெரியவந்துள்ளது.

# விக்ரமின் 'வீர தீர சூரன்' கவனம் ஈர்த்த டைட்டில் டீசர்




நடிகர் விக்ரம் 'சித்தா' பட இயக்குநர் அருண்குமாருடன் இணையும் புதிய படத்துக்கு 'வீர தீர சூரன்' என பெயரிடப்பட்டுள்ளது. விக்ரமின் 62வது படமான இதில் எஸ்.ஜே.சூர்யா, சுராஜ் வெஞ்சரமூடு, துஷாரா விஜயன் உட்பட பலர் நடிக்கின்றனர். இந்தப் படத்தை ஹெச்.ஆர். பிக்சர்ஸ் சார்பில் ரியா ஷிபு தயாரிக்கிறார். படத்துக்கு ஜி.வி. பிரகாஷ்குமார் இசையமைக்கிறார். விக்ரம் பிறந்த நாளை முன்னிட்டு இப்படத்திற்கான சிறப்பு வீடியோ ஒன்றை படக்குழு வெளியிட்டுள்ளது. இந்த வீடியோவில் விக்ரமின் தோற்றம் நம் கவனத்தை கவர்கிறது. படத்தின் டைட்டிலில் இரண்டாம் பாகம் என குறிப்பிடப்படுகிறது. இதன் முந்தைய பாகம் அடுத்து வெளியாகும் என தெரிகிறது. இந்நிலையில் வீர தீர் சூரன் என்ற தலைப்பில் விஷ்ணு விஷால் ஒரு படத்தில் நடித்து வருகிறார். இப்படத்திற்கான போஸ்டரை படக்குழு ஏற்கனவே வெளியிட்டுள்ளது. இதனிடையே விக்ரம் படத்திற்கும் இதே தலைப்பு வைக்கப்பட்டுள்ளது சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

# 'கல்நாயக் 2' ரன்பீர் , ரன்வீர், யாஷ் உள்ளிட்டோரிடம் பேச்சுவார்த்தை



1993 ம் ஆண்டு வெளிவந்த இந்தி ஆக்ஷன் திரைப்படம் 'கல்நாயக்' . முக்தா ஆர்ட்ஸ் பிலிம்ஸ் சார்பில் சுபாஷ் காய் எழுதி, இயக்கி இந்த படத்தை தயாரித்தார். இப்படத்தில் சஞ்சய் தத், மாதுரி தீட்சித் மற்றும் ஜாக்கி ஷெராப் உள்ளிட்ட பலர் நடித்தனர் .

இந்த படம் ரசிகர்களிடம் பெரும் வரவேற்புபெற்றுவசூல்சாதனைபடைத்தது. இப்படத்தின் 'சோலி கே பீச்சாய் க்யா ஹை' என்ற பாடல் பட்டி தொட்டி எல்லாம் ஒலித்தது.

இந்நிலையில் 30 ஆண்டுகளுக்கு பிறகு 'கல்நாயக் 2' படத்தை இயக்குனர் சுபாஷ் மீண்டும் எடுக்க திட்டமிட்டுள்ளார். இந்த படத்திற்கான கதையை அவர் தயார் செய்துள்ளார்.

இந்த படத்தில் பிரபல நடிகர்கள் ரன்பீர் கபூர், ரன்வீர் சிங், யாஷ் மற்றும் அல்லு அர்ஜுன் போன்ற நடிகர்களை நடிக்க வைக்க இயக்குனர் சுபாஷ் பேச்சுவார்த்தை நடத்தி வருகிறார்.

மேலும் இப்படத்தில் நடிக்க உள்ள நடிகர் ,நடிகைகள் குறித்தும் அவர் ஆலோசித்து வருகிறார். விரைவில் கல்நாயக் 2 படம் தயாரிப்பு பணிகள் தொடங்க இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.

# கேண்டிடேட் செஸ் போட்டி: 11வது சுற்றில் குகேஷ் டிரா பிரக்ஞானந்தா, விதித் குஜராத்தி தோல்வி



உலக சாம்பியனுடன் மோதும் வீரர், வீராங்கனை யார்? என்பதை முடிவு செய்யும் கேண்டிடேட் செஸ் போட்டி கனடாவில் உள்ள டொரான்டோ நகரில் நடைபெற்று வருகிறது. இதில் இந்தியா சார்பில் 5 பேர் பங்கேற்றுள்ளனர்.

14 ரவுண்டுகளை கொண்ட இந்த போட்டி தொடரின் 11வது சுற்று ஒருநாள் ஓய்வுக்கு பிறகு நேற்று நடந்தது.

சென்னையை சேர்ந்த கிராண்ட்மாஸ்டர் டி. குகேஷ் இந்த சுற்றில் அமெரிக்காவை சேர்ந்த பேபியானோ கருணாவை எதிர் கொண்டார். வெள்ளை நிற காய்களுடன் விளையாடிய குகேஷ் இந்த போட்டியில் 40வது காய் நகர்த்தலுக்கு பிறகு டிரா செய்தார். அவரது 7வது டிராவாகும்.

மற்றொரு சென்னை கிராண்ட்மாஸ்டரான பிரக்ஞானந்தா மற்றும் விதித் குஜராத்தி ஆகியோர் 11வது சுற்றில் தோல்வியை தழுவினார்கள். ஹிகாரு நகமுரா (அமெரிக்கா) பிரக்ஞானந்தாவையும், இயன் நெபோம்னியாச்சி (ரஷியா) விதித் குஜராத்தியையும் தோற்கடித்தனர்.

11 சுற்றுகள் முடிவில் ரஷிய வீரர் இயன் நேபோம்னியாச்சி 7 புள்ளிகளுடன் முன்னிலையில் உள்ளார். டி.குகேஷ், ஹிகாரு நகமுரா ஆகியோர் தலா 6.5 புள்ளியுடன் அதற்கு அடுத்த நிலைகளில் உள்ளனர.

பிரக்ஞானந்தா 5.5 புள்ளிகளுடன் 5வது இடத்திலும், விதித் குஜராத்தி 5 புள்ளிகளுடன் 6வது இடத்திலும் உள்ளனர். பேபியானோ 6 புள்ளியுடன் 4வது இடத்திலும், அலிசேரா பிரவுசியா (பிரான்ஸ்) 4.5 புள்ளிகளுடன் 7வது இடத்திலும், நிஜாத் அப்சோவ் (அஜர்பைஜான்) 3 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் உள்ளனர்.

பெண்கள் பிரிவில் இந்திய வீராங்கனை ஹம்பி. பல்கேரிய வீராங்கனை நூர்சிபால் சலிமோவை தோற்கடித்தார். இதன் மலம் அவர் 5.5 புள்ளியுடன் 3 முதல் 5வது இடங்களில் உள்ளார்.

மற்றொரு இந்திய வீராங்கனையான சென்னையை சேர்ந்தவருமான வைஷாலி 11வது சுற்றில் ரஷியாவை அலெக்சான்ட்ரா சோரியாச்சினாவை அதிர்ச்சிகரமாக வீழ்த்தினார். வைஷாலி 4.5 புள்ளிகளுடன் 6 முதல் 7வது இடங்களில் உள்ளார்.

# டோனிதான் கஷ்டம்: டிகே அப்படி இல்லை ரோகித் சர்மாவின் சுவாரஸ்ய தகவல்




ஐபிஎல் தொடர் இந்தியாவில் பல்வேறு நகரங்களில் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த தொடர் மே மாதம் 26ந் தேதியுடன் முடிவடைகிறது. அதனை தொடர்ந்து டி20 உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டி ஜூன் 1ந் தேதி முதல் 29ந் தேதி வரை அமெரிக்கா, வெஸ்ட் இண்டீசில் நடக்கிறது. இந்தப் போட்டியில் 20 நாடுகள் பங்கேற்கின்றன. உலகக்கோப்பை போட்டிக்கான 15 பேர் கொண்ட வீரர்கள் பட்டியலை மே 1ந் தேதிக்குள் சமர்ப்பிக்க வேண்டும். உலகக்கோப்பை போட்டிக்கான இந்திய அணியை தேர்வு செய்வது தொடர்பாக தேர்வு குழு தீவிரமாக ஆலோசனை செய்து வருகிறது. இதற்காக ஐ.பி.எல். போட்டியில் விளையாடும் வீரர்களை தேர்வு குழுவினர் தீவிரமாக கண்காணித்து வருகிறார்கள். இந்நிலையில் மும்பை பெங்களூரு அணிகள் மோதிய ஆட்டத்தில் தினேஷ் கார்த்திக்கை பார்த்து ரோகித், டி20 உலகக் கோப்பைக்கான இந்திய அணி தேர்வு இன்னும் சில நாட்கள் தான் உள்ளது. அதிரடியான ஆட்டத்தை வெளிப்படுத்து டி கே என கிண்டாலாக கூறினார். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அந்த போட்டியில் தினேஷ் கார்த்திக் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அந்த போட்டி மட்டுமல்லாமல் அதற்கு அடுத்த போட்டியிலும் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். ஐதராபாத் அணிக்கு எதிரான போட்டி முடிந்து விட்டது என நினைத்த நிலையில் தனி ஒருவனாக நின்று ஆட்டத்தை மாற்றினார். இருந்தாலும் அந்த போட்டியில் ஆர்சிபி தோல்வியை தழுவியது. ஆனாலும் அவரது ஆட்டம் அனைவரின் மனதில் இடம் பிடித்தது.

ஐபிஎல் தொடரில் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வரும் தினேஷ் கார்த்திக்கை டி20 உலகக் கோப்பை அணியில் சேர்க்க வேண்டும் என முன்னாள் வீரர்கள் கருத்து தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில் தினேஷ் கார்த்திக் குறித்து ரோகித் சர்மா கூறியதாவது: உலகக் கோப்பைக்கான இந்திய அணியில் விளையாட வேண்டும் என எம்எஸ் டோனியை சமாதானப்படுத்துவது கடினமாக இருக்கும். தினேஷ் கார்த்திக்கை சமாதானப்படுத்துவது எளிதாக இருக்கும் என ரோகித் கூறினார்.

# ஹாட்ரிக் வெற்றி ஆர்வத்தில் சிஎஸ்கே: லக்னோ சூப்பர் ஜெயன்ட்சுடன் இன்று மோதல்



17வது ஐ.பி.எல். 20 ஓவர் கிரிக்கெட் போட்டி கடந்த 22ந் தேதி சென்னையில் தொடங்கியது. இந்தியாவின் பல்வேறு நகரங்களில் இந்த போட்டி தொடர் நடைபெற்று வருகிறது.

இதில் பங்கேற்றுள்ள 10 அணிகளும் உள்ளூர், வெளியூர் என தலா 14 ஆட்டங்களில் மோத வேண்டும். லீக் முடிவில் புள்ளிகள் அடிப்படையில் முதல் 4 இடங்களை பிடிக்கும் அணிகள் 'பிளேஆப்' சுற்றுக்கு தகுதி பெறும்.

நடப்பு சாம்பியனும், ஐ.பி.எல். கோப்பையை 5 முறை வென்ற அணியுமான சென்னை சூப்பர் கிங்ஸ் 4 வெற்றி, 2 தோல்வியுடன் 8 புள்ளிகள் பெற்று 3வது இடத்தில் உள்ளது.

சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த 3 ஆட்டத்திலும் சி.எஸ்.கே. (பெங்களூரு 6 விக்கெட் , குஜராத் 63 ரன், கொல்கத்தா 7 விக்கெட்) வெற்றி பெற்றது. வெளியூரில் ஆடிய 3 போட்டியில் ஒன்றில் (மும்பை) வென்றது. டெல்லி, ஐதராபாத்திடம் தோற்றது.

ருதுராஜ் கெய்க்வாட் தலைமையிலான சென்னை சூப்பர் கிங்ஸ் அணி 7வது போட்டியில் லக்னோ சூப்பர் ஜெயன்ட்சை நாளை (19ந் தேதி) எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் இரவு 7.30 மணிக்கு லக்னோவில் நடக்கிறது.

லக்னோவை வீழ்த்தி சென்னை சூப்பர் கிங்ஸ் 5வது வெற்றியை பெறுமா? என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. சி.எஸ்.கே. அணி தொடர்ச்சியாக 2 ஆட்டத்தில் வெற்றி பெற்று இருந்தது. இதனால் நாளைய போட்டியில் ஹாட்ரிக் வெற்றியை பெறும் ஆர்வத்தில் உள்ளது.

பேட்டிங் மற்றும் பந்து வீச்சில் சென்னை சூப்பர் கிங்ஸ் சம பலத்துடன் திகழ்கிறது.

பேட்டிங்கில், ஷிவம் துபே (242 ரன்) கேப்டன் ருதுராஜ் கெய்க்வாட் (224), டோனி ஆகியோர் மிகவும் நல்ல நிலையில் உள்ளன.


தொடக்க வீரர் ரவீந்திரா, மிச்சேல், ரகானே ஆகியோர் பேட்டிங்கில் முன்னேற்றம் அடைவது அவசியமாகும். புதுமுக வீரர் சமீர் ரிஸ்விக்கு வாய்ப்பு கொடுத்து முன் வரிசையில் ஆட வைக்க வேண்டும்.

பந்து வீச்சில் முஸ்டாபிசுர் ரகுமான் (10 விக்கெட்), பதிரனா (8 விக்கெட்), ஜடேஜா ஆகியோர் நல்ல நிலையில் உள்ளனர்.

லக்னோ அணி 3 வெற்றி, 3 தோல்வியுடன் 6 புள்ளிகள் பெற்று 5வது இடத்தில் உள்ளது. அந்த அணி பஞ்சாப் (21 ரன்), பெங்களூரு (28 ரன்) குஜராத் (33 ரன்) ஆகிய வற்றை வென்று இருந்தது. ராஜஸ்தான் (20 ரன்), டெல்லி (6 விக்கெட்), கொல்கத்தா (8 விக்கெட்) ஆகியவற்றிடம் தோற்றது.

லக்னோ ஹாட்ரிக் தோல்வியை தவிர்த்து 4வது வெற்றியை பெறும் வேட்கையில் உள்ளது. அந்த அணியில் கேப்டன் லோகேஷ் ராகுல், நிக்கோலஸ் பூரன், ஸ்டோன்ஸ், யாஸ் தாக்கூர், ரவி பிஷ்னோய் போன்ற சிறந்த வீரர்கள் உள்ளனர்.

இரு அணிகளும் இதுவரை 3 முறை மோதியுள்ளன. இதில் இரு அணிகளும் தலா ஒரு ஆட்டத்தில் வெற்றி பெற்றன. ஒரு போட்டி முடிவு இல்லை.



**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**
**நாவினாற் சுட்ட வடு**

**விளக்கம்:**
**தீயினால் சுட்ட புண் புறத்தே வடு இருந்தாலும் உள்ளே ஆறிவிடும்; ஆனால் நாவினால் தீய சொல் கூறிச் சுடும் வடு என்றும் ஆறாது.**

நமது தினகனி
செய்திகள் மற்றும்
விளம்பரங்கள் தொடர்புக்கு:
94436 99066

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 63815.1. Editor: KANI RAJA V.